**தலைப்பு 212 – பரீட்சைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 212 பரீட்சைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 மே 12 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 3,196.15 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 3,021.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 175.00 மில்லியன் அதாவது 5.48 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருபவை | 3,030.40 | 2,979.53 | 50.87 | 1.68 |
| மூலதனம் | 165.75 | 41.62 | 124.13 | 74.89 |
| மொத்தம் | **3,196.15** | **3,021.15** | **175.00** | **5.48** |

2.2 **வருமானக் கணக்கு**

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆண்டிற்கான வருமானக் குறியீடு ஒன்றிற்காக கூட்டுத்தொகை ரூபா 230 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 240.9 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 104.74 சதவீதமாகும். விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைத்தல் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.13 | 230.0 | 240.9 | 10.9 | 4.74 |

2.3 **முற்பணக் கணக்கு**

2.3.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 20.52 | 12.99 | 15.00 | 18.63 | 100.00 | 63.94 |

2.4 **பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் பின்வரும் 03 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.63 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0105/000 | 0.35 |
| 6000/0000/00/0016/0053/000 | 1.12 |
| 6000/0000/00/0018/0115/000 | 0.16 |
| மொத்தம் | **1.63** |

2.5 **கணக்காய்வு அவதானிப்பு**

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. **பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

3.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

விடய இலக்கம் 21201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 645,024 ஆக காணப்பட்டதுடன் அது 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 443,320 இற்கான கடன் மீதி 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடக்கமும், சேவையை விட்டுச் சென்றுள்ள 3 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 127,271 இற்கான கடன் மீதி 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் காணப்பட்ட போதிலும் அந்த கடன் மீதிகள் மீளாய்வாண்டு இறுதி வரை திணைக்களத்தினால் அறவீடு செய்வதற்கு தவறியிருந்தது.

3.2 **இணக்கமின்மைகள்**

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (அ) நிதிப் பிரமாணம் 94(1) | 24,657,790 | 04 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் மீதி ரூபா 4,217,457 தொகையினை மிகைத்து ரூபா 24,657,790 இற்கான பொறுப்புக்களும் ஏற்பட்டிருந்தன. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 936,544 | வழங்கப்பட்டிருந்த ஆனால் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள ரூபா 936,544 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

3.3 **முகாமைத்துவ பலவீனங்கள்**

திணைக்களத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 19,652,500 தொகை பெறுமதியான கடித உரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வழங்குனர் மற்றும் திணைக்களத்திற்கு இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைகள் உடன்படிக்கையின் 18 ஆம் நிபந்தனையின் (iii) ஆம் பந்தியின் பிரகாரம் வழங்குனரினால் கட்டளைகளை குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் தாமதித்து வழங்கியமையினால் தண்டப் பணத்தை வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டும். எனினும் திணைக்களம் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

3.4 **மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
| --- | --- | --- | --- | --- | --- |
| (i) | சிரேஷ்ட நிலை | 83 | 61 | 22 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 05 | 13 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 417 | 335 | 82 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 164 | 177 | - | 13 |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 14 | - | 14 |
| | **மொத்தம்** | **682** | **592** | **117** | **27** |